# விரிசல்கள் மூலம் பொருட்கள் விழுகின்றபோது [6:1–3]

*சபையின் செயல்முறைத் திட்டத்தை ஒரு மேஜையின் மேற்பகுதி என்று கற்பனை செய்து கொள்ளுங்கள். நாம் மேஜையின் மேற்பகுதி வழவழப்பானதாக, நிறைவுற்றதாக, பளபளப்பூட்டப்பட்டதாக இருக்க வேண்டும் என்றே விரும்புவோம். ஆனால் உண்மையில் பார்க்கப் போனால் இம்மேஜையின் மேற்பகுதியானது சொரசொரப்பாகவும், சமமற்றதாகவும் உள்ளது (சில இடங்களில் உயரமாகவும், சில இடங்களில் மிகவும் தாழ்வானதாகவும் உள்ளது). குறிப்பாக, இது விரிசல்கள் நிறைய உடையதாய் இருக்கிறது. சில விரிசல்கள் பெரிதாகவும், சில சிறிதாகவும், சில நீளமாகவும், சில குட்டையாகவும் உள்ளது ... ஆனால் நிறைய விரிசல்கள் உள்ளன ... இவ்விரிசல்கள் மூலமாக பொருட்கள் அடிக்கடி கீழே விழுகின்றன.[1] ஒரு விஷயத்தைப்பற்றி அக்கறையெடுத்துச் சரிப்படுத்தியுள்ளேன் என்று நான் எண்ணுகின்றபோது, பின்னால் (திகைப்பூட்டும் வகையில்) அது சரியானபடி கவனிக்கப்படவில்லை என்பதை நான் அடிக்கடி காண நேரிடுகின்றது.[2]*

மக்கள் இவ்விரிசல்களின் மூலம் விழுந்துபோவது என்பதே மாபெரும் அக்கறை கொள்ள வேண்டிய விஷயமாகும். நாம் அறியாத அல்லது உடனடியாக அக்கறை காண்பிக்காத தேவைகள் உறுப்பினர்களிடம் அடிக்கடி காணப்படுகின்றன. இதன் விளைவாக உணர்வுகள் பாதிக்கப்படலாம். சில சமயங்களில் மக்கள் சபைக்கு வராமலிருந்துவிடுகின்றனர்; விரிசல்களின் மூலம் அவர்கள் விழுந்து போகின்றனர். ஒருவேளை உறுப்பினர்கள் சபை கூடிவருதலை விட்டுவிடத் தொடங்கலாம் (எபி. 10:25), அதை நாம் கவனிக்காமல் இருந்து விடுகிறோம் அல்லது கவனித்தாலும், ஒரு பிரச்சனை நிலவுவதை உடனடியாகக் காண முயற்சி செய்வதில்லை. அநேக வேளை

*களில் நாம் இப்பிரச்சனையை ஆராய முற்படும் வேளையில், அவர்களின் ஆவிக்குரிய நிலையானது அவ்வுறுப்பினர்கள் மறுபடியும் பழைய நிலைக்குக் கொண்டுவர முடியாதபடிக்கு மிகவும் சுருங்கிப்போய் விடுகின்றது. விலையேறப் பெற்ற இந்த ஆத்துமாக்கள், விரிசல்கள் மூலம் விழுந்து போய் விடுகின்றனர்.*

*மக்கள் விரிசல்களின் மூலம் விழுந்துவிடுகின்றனர்; இது வாழ்க்கையின் ஒரு உண்மையாகும். நாம் கேட்க வேண்டிய கேள்வி இதுதான்: "மக்கள் விரிசல்கள் மூலம் விழும்போது நாம் என்ன செய்ய வேண்டும்?" அப். 6:1-7ல் இதற்கு தேவனுடைய பதில் உள்ளது.*

## *ஆதி சபையில் மக்கள் விரிசல்களின் மூலம் விழுந்தனர் (6:1)*

*"அந்நாட்களிலே, சீஷர்கள் பெருகினபோது, கிரேக்கரான வர்கள், தங்கள் விதவைகள் அன்றாடக விசாரணையில் திட்டமாய் விசாரிக்கப்படவில்லையென்று, எபிரெயருக்கு விரோதமாய் முறுமுறுத்தார்கள்"[3] (6:1). "அந்நாட்களிலே" என்ற வார்த்தைகள் இந்த வசனத்தை, முந்திய அதிகாரத்துடன் பிணைக்கின்றது: "தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளி லேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்" (5:42). அப்போஸ்தலர் களின் போதனை மற்றும் பிரசங்கத்தினால் "சீஷர்கள் எண்ணிக் கையில் பெருகினார்கள்."*

*கிறிஸ்தவர்கள் எருசலேமிலிருந்து சிதறடிக்கப்பட்ட காலத்தை நாம் நெருங்குகின்றோம் (8:1-4). சிலர், இச்சம்பவம் சபை ஆரம்பமான பிறகு மூன்று அல்லது நான்கு ஆண்டுகளில் நடைபெற்றதாக எண்ணுகின்றனர்; சிலர், இச்சம்பவம் ஆறு முதல் எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெற்றதாகக் கணிக் கின்றனர். அக்காலகட்டத்தில் எத்தனை பேர் கிறிஸ்தவர் களாகச் சேர்க்கப்பட்டனர்? மக்கள் தினந்தோறும் "சேர்க்கப் பட்டார்கள்" என்ற லூக்காவின் சொல் விளக்கத்தை அப்படியே நாம் எடுத்துக் கொண்டால், எருசலேமில் இருபது அல்லது முப்பதாயிரம் கிறிஸ்தவர்கள் இருந்திருக்கக் கூடும்![4]*

*இந்த இருபது முதல் முப்பதாயிரம் மக்கள் வெறுமனே தண்ணீரில் முழுகப்பட்டவர்களாக மட்டும் இருக்கவில்லை.*

*இவ்வசனம் அவர்களைச் "சீஷர்கள்" என்று அழைக்கின்றது. இவ்வார்த்தையானது சுவிசேஷ நூல்களில் இயேசுவைப் பின்பற்றுபவர்களைக் குறிப்பதற்காக அடிக்கடி பயன்படுத்தப் பட்டிருந்தாலும், நடபடிகள் நூலில் இவ்விடத்தில்தான் முதன்முறையாகக் காணுகின்றோம். "சீஷன்" என்றால் "கற்றுக் கொள்பவன்" என்று பொருள். இயேசு, பிரதான கட்டளை யில், "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளை யும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து" (மத். 28:19) என்று தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு அறைகூவல் விடுத்தார். இயேசு கூறியவாறே அப்போஸ்தலர்கள் பிரசங்கித்துக் கொண்டிருந்த னர் (மாற். 16:15). இதன் விளைவாக இயேசுவின் சீஷர்கள் எண்ணிக்கையில் பெருகிக் கொண்டிருந்தனர்.*

*அநேக சமயங்களில் உள்ளூர் சபையானது எண்ணிக்கை யிலும், ஆவிக்குரிய வகையிலும் வளர வேண்டும் என்று நான் ஜெபித்திருக்கிறேன், மற்றவர்கள் இவ்வாறு ஜெபிப்பதைக் கேட்டுமிருக்கிறேன். எருசலேமிலிருந்த சபையார் இவ்விரண்டு செயல்களையும் செய்து கொண்டிருந்தனர்! எனவே அது முழுமையான நிலையை அடைந்திருந்ததா? இல்லவே இல்லை: "அந்நாட்களிலே சீஷர்கள் பெருகினபோது, கிரேக்கரானவர் கள் ... எபிரெயருக்கு விரோதமாய் முறுமுறுத்தார்கள்" (6:1). தோல்வியைப் போலவே வெற்றியும் பிரச்சனைகளைக் கொண்டு வந்தது!*

*முதலாவது வெளியிலிருந்து - பேதுருவையும் யோவானை யும் கைது செய்வித்தது மூலம் - சபையின் வளர்ச்சியைத் தடைசெய்யச் சாத்தான் முயற்சி செய்திருந்தான். பிறகு அவன் உள்ளிருந்து - அனனியா மற்றும் சப்பீராளைப் பயன்படுத்தி - சபையை அழிக்க முயற்சி செய்திருந்தான். அடுத்தபடியாக அவன் மறுபடியும் வெளியிலிருந்து - எல்லா அப்போஸ்தலர் களையும் கைது செய்வித்தது மூலம் - முயற்சி செய்திருந்தான். இப்பொழுது அவன் மறுபடியும் சபைக்குள்ளிருந்தே அதை உடைக்க முயற்சி செய்து கொண்டிருந்தான். சபையின் பலங்களில் இரண்டை அவன் பயன்படுத்தினான் என்பதைக் கவனியுங்கள்: காணக்கூடிய அதன் வளர்ச்சியையும், ஒவ்வொரு உறுப்பினரும் அக்கறையோடு கவனிக்கப்பட்ட தையும் அவன் பயன்படுத்தினான். (உங்கள் பலவீனங்களின் மூலமாக*

சாத்தான் உங்களை அழிக்க முடியாவிட்டால், உங்கள் பலங்களின் மூலமாக அவன் உங்களைத் தாக்குவான்.[5])

எருசலேமிலிருந்த சபையார் ஒவ்வொருவரும் தங்களிடம் இருந்ததைப் பகிர்ந்தளித்து, தேவையில் இருந்த உறுப்பினர் களை எவ்வளவாய்க் கவனித்துக் கொண்டார்கள் என்று நாம் கண்டிருக்கிறோம் (2:44, 45; 4:32-35). தேவையில் இருந்த உறுப்பினர்களின் பட்டியலில் முதலாவதாக விதவைகள் இருந்தனர்.[6] அந்நாட்களில் ஒரு விதவையைக் காட்டிலும் ஏழ்மையினால் அதிகமாய்ப் பாதிக்கப்பட்டவர்கள் யாரும் இல்லை, ஏனெனில் அவள் தனது போஷகரை இழந்திருந்தாள். அவளுக்கு குடும்பம் இல்லாதிருந்ததால் அவளது நிலை மிகவும் மோசமாகியிருந்தது. கவனிப்பதற்கு ஒருவரும் இல்லாத முதிய விதவைகளைப் பராமரிப்பது ஆதி சபையின் முக்கிய செயல்பாடாயிருந்தது (யாக் 1:27; 1 தீமோ. 5:3-16).

அப். 2:45ன் "பகிர்ந்து கொள்ளுதல்" பற்றியும், 4:35ல் உள்ள "அவனவனுக்குத் தேவையானதற்குத் தக்கதாய்ப் பகிர்ந்து கொடுத்தல்" பற்றியும் இருந்த ஆழ்ந்த அறிவானது அப். 6:1ல் தரப்படுகிறது. அங்கு "தினந்தோறும் உணவு வழங்கப்பட்டது." ஆரம்பத்தில் இப்பணிக்கு அப்போஸ்தலர்களே பொறுப்பேற்றி ருந்ததாகக் காணப்படுகிறது[7] (அவர்கள் மளிகை சாமான்களைத் தூக்கிக்கொண்டு எருசலேம் நகர முழுவதும் அலைந்திருக்க மாட்டார்கள், ஆனால் மற்ற மக்களை அதைச் செய்யவைப்ப தற்குப் பொறுப்பாயிருந்திருப்பார்கள்[8]). இந்த ஏற்பாடு சற்று காலம் பயனுள்ளதாய் இருந்தது; ஆனால் சபை வளரும்போது, இந்நடைமுறை போதாததாகி, மக்கள் புறக்கணிக்கப்பட ஏதுவாயிற்று.

சபையிலிருந்த கிரேக்கர்களுடைய விதவைகள், விரிசல்கள் மூலம் விழுந்தவர்களாயிருந்தனர். மூலகிரேக்க மொழியில் "கிரேக்கரானவர்கள் எபிரெயருக்கு விரோதமாய் முறுமுறுத் தார்கள்" என்றுள்ளது. இது யூத கிறிஸ்தவர்களுக்கும் புறஜாதி கிறிஸ்தவர்களுக்கும் இடையில் நிலவிய வேறுபாட்டை மறைமுகமாகக் குறிப்பிடுவதாயிருக்கலாம். ஆயினும் புறஜாதியார் இன்னும் கிறிஸ்தவர்கள் ஆகியிருக்கவில்லை. "கிரேக்கரானவர்கள்" என்றால் "கிரேக்க மொழி பேசுபவர்கள்" என்று பொருள்படும் (இது NASBயில் இச்சொற்றொடர் பயன் பட்டுள்ள விதம் ஆகும்). இவர்கள் மற்ற தேசங்களுக்கு

உபத்திரவம் அல்லது பொருளாதாரத் தேவையினால் சிதறிச் சென்றிருந்த யூதர்கள் ஆவார்கள், இவர்களின் முதல் மொழி (அந்நாட்களில் அலெக்ஸாந்தரின் படையெடுப்பினால் உலகளாவிய கொய்னி [பொதுவான] மொழியாயிருந்த), கிரேக்கமாயிருந்தது, இவர்கள் தாங்கள் சென்றிருந்த நாடுகளின் பழக்க வழக்கத்தைப் பின்பற்றுபவர்கள் ஆனார்கள். இதற்கு மாறாக, "பிறந்த நாட்டிலேயே வாழ்ந்த எபிரெயர்கள்" யூதர் களாயிருந்தனர், இவர்களின் அடிப்படை மொழி (எபிரெய மொழியின் மாறுபட்ட வடிவமான)[9] அரமாயிக் மொழியாக இருந்தது. இவர்கள் தங்கள் பிதாக்களின் பழக்க வழக்கங்களைத் தொடர்ந்து கடைப்பிடித்ததாகத் தங்களையே பெருமை பாராட்டிக் கொண்டனர். இவர்களில் அநேகர் பலஸ்தீனத் திலேயே வசித்தனர், இவர்களில் அநேகர் கிரேக்கரானவர் (யூதர்)களை (தங்களின் கண்ணோட்டத்தில்) "தேவனற்ற வழிகளைத் தேர்ந்து கொண்டதாகக்"[10] கூறித் தாழ்வாகப் பார்த்தனர். எருசலேமிலிருந்த சபையில், பிறந்த நாட்டிலேயே வாழ்ந்த யூதர்களும், கிரேக்கரான யூதர்களும் கலந்த குழுவாகக் கூடியது.[11] இதுவரைக்கும் அவர்கள் ஒரே இருதயமும் ஒரே மனமும் உள்ளவர்களாய் இருந்ததற்கான பெருமை சுவிசேஷத் தின் வல்லமையையே சாரும் (2:46; 4:32; 5:12). ஆயினும், எந்த நேரத்திலும் கொதிக்கக்கூடிய, எளிதில் ஆவியாகக்கூடிய திரவங்களின் கலவை போலவே[12] அவர்களின் நிலைமை இருந்தது.

ஆறாம் அதிகாரத்தில் சாத்தான் வெப்பத்தைக் கிளப்பி விட்டான், பானையானது கொதிக்க ஆரம்பித்தது: "ஒரு புகார் எழும்பிற்று ..."[13] இலேசான ஒரு விஷயம் அதிகமாய்க் கற்பனை செய்யப்பட்டு விட்டதாகவும், கிரேக்கரான யூதர்கள் புகார் சொல்வதற்குக் காரணமேயில்லையென்றும் சில விளக்கவுரை யாளர்கள் நம்புகின்றனர். இது சாத்தியமே; சில வேளைகளில் மக்கள், புகார் செய்வதற்கான சூழ்நிலைகளை எதிர்நோக்கி யிருக்கின்றனர். இருப்பினும், "தங்கள் விதவைகள் திட்டமாய் விசாரிக்கப்படவில்லையென்று அவர்கள் எண்ணினார்கள்" என்று எழுதாமல், "தங்கள் விதவைகள் திட்டமாய் விசாரிக்கப் படவில்லை" என்று லூக்கா கூறியுள்ளதால், இந்த யூதர்கள் முறுமுறுத்தது நியாயமானதாயிருந்திருக்கலாம்.

இது வேண்டுமென்றே செய்யப்பட்ட ஒரு புறக்கணிப்பா

*யிருந்தது என்று சில கல்வியாளர்கள் கருதுகின்றனர். அப்போஸ் தலர்கள் பிறந்த தேசத்திலேயே வாழ்ந்த யூதர்களாய் இருந்த தால், அவர்கள் பிறநாடுகளுக்குச் சென்றிருந்த (கிரேக்கரான) யூதர்களைக் காட்டிலும் மேலானவர்கள் என்ற உணர்வுடனிருந் திருக்கலாம், மற்றும் அப்போஸ்தலர்கள் தாங்கள் அறிந்திருந்த மனிதர்களையே அன்றாடக விசாரணையில் உதவி செய்ய நியமித்திருப்பார்கள், இந்த மனிதர்களும் பிறந்த தேசத்திலேயே வாழ்ந்த யூதர்களாகவும், அதே மேட்டிமை உணர்வுள்ளவர் களாகவும் இருந்திருப்பார்கள். அப்போஸ்தலர்கள் அன்றாடக விசாரணையில் உதவுவதற்குப் பிறந்த நாட்டிலேயே இருந்த யூதர்களையே நியமித்திருக்க வேண்டும் என்பது உறுதி - ஏனெனில் பிறந்த நாட்டிலேயே இருந்த யூதர்களுக்கு எதிரா கவே முறுமுறுப்பு உண்டாயிற்று.*[14] *ஆயினும் இவ்வாறு நடந்தது வேண்டுமென்றே செய்யப்பட்டது என்று நம்புவதற்குக் காரணம் எதுவும் இல்லை. நாம் மிகச் சிறந்த விருப்பங்கள் கொண்டிருந்தாலும், மக்கள் அப்பொழுதும்கூட விரிசல்களின் மூலம் விழுந்து போகக்கூடும்.*

**நல்ல தலைமைத்துவம் இருந்தும் கூட, மக்கள் விரிசல்களின் மூலம் விழுந்து போகக்கூடும்**

*வசனம் 1ல் ஒரு முக்கியமான பாடத்தை நாம் காண முடியும்: உலகிலேயே மிகச் சிறந்த தலைமைத்துவத்தின் கீழ்கூட புறக்கணிப்புகள் நடைபெற முடியும். ஆவியானவரால் ஏவப்பட்டிருந்த அப்போஸ்தலர்களைக் காட்டிலும் சிறந்த முன்னோடிகளை எந்த ஒரு உள்ளூர் சபையும் பெற்றிருக்க முடியாது; ஆயினும், இப்படிப்பட்ட மனிதர்களின் தலைமைத் துவத்தின் கீழ்கூட, மக்கள் புறக்கணிக்கப்பட்டனர். விரிசல் களின் மூலம் மக்கள் விழுகின்றபோது, அது சபையின் தலைமைத்துவத்தின்மேல் பிரதிபலிக்க வேண்டிய அவசியம் இல்லை. இந்தச் சூழ்நிலையை தலைவர்கள் கையாண்ட விதமானது அவர்களின் திறமையைப் பிரதிபலிக்கலாம், ஆனால் அவர்களின் பலவீனமான தலைமைத்துவத்தினால் தான் அந்தச் சூழ்நிலை ஏற்பட்டது என்று சொல்வதற்கில்லை.*

**விரிசல்களின் மூலம் மக்கள் விழுகின்றபோது, மோசமான பிரச்சனைகள் எழும்பக்கூடும்**

வசனம் 1ல் இருந்து நாம் இன்னொரு முக்கியமான பாடத்தையும் கற்றுக் கொள்ள முடியும்: விரிசல்களின் மூலம் மக்கள் விழுகின்றபோது, மோசமான பிரச்சனைகளுக்கான சாத்தியக்கூறு மிக உண்மையாயுள்ளது. NASBயில் "ஒரு புகார் (முறையீடு) எழுந்தது'' என்றுள்ளது. ''முறையீடு'' என்ற வார்த்தை போதுமான அளவு பலமுள்ளதல்ல. இது ஒரே ஒருமுறை நடந்த சம்பவம் என்ற கருத்தையோ அல்லது கிரேக்கரானவர்(யூதர்)கள் மூப்பர்களிடம் ''ஒரு முறை யீட்டைப்'' பதிவு செய்தனர் (அதையே அவர்கள் செய்ய வேண்டும் [மத். 18:15-17]) என்ற கருத்தையே இவ்வார்த்தை யானது பதியச் செய்யலாம். ''முறையீடு'' என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது, "தாழ்ந்த குர லில் பேசுதல் ..., தாழ்ந்த மற்றும் அமிழ்த்தப்பட்ட உரையாடல் ... அதிருப்தியை துயரத்தோடு மறைமுகமாக வெளிப் படுத்துதல், முறுமுறுத்தல்" என்று பொருள்படுகிறது. பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பில் இஸ்ரவேல் மக்கள் வனாந்திரத்தில் முறுமுறுத்ததைப்[15]பற்றிப் பேசும்போது இவ் வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இது பிலி. 2:14லும் பயன் படுத்தப்பட்டுள்ளது: "எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லா மலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்" ["முறுமுறுப்பு"; KJV]. பழைய ஏற்பாட்டில் இவ்வார்த்தை நேர்மறையான பொருளில் பயன்படுத்தப்படவேயில்லை. இது தெளிவற்ற விதத்தில் பேசி, முறுமுறுத்து, சபையின் உறுப்பினர்களின்மேல், முறையீடு செய்தலைக் குறிக்கிறது. குற்றத்திற்கு காரணமானவரிடத்தில் பேசுவதற்குப் பதில், மற்றவர்களிடம் பேசுவதையும் இது உள்ளடக்குகின்றது. இது உறுப்பினர்களுக்குள் மறைவாக நிலவக்கூடிய ஒரு மகிழ்ச்சியற்ற நிலைமையையும், சபையைத் துண்டாக்கக்கூடிய அளவு பலம் பெற்று வளரும் ஒரு அதிருப்தி யான அலையையும் கூட குறிப்பதாய் உள்ளது!

இப்பிரச்சனை தீர்க்கப்பட்டிராவிட்டால், உடனடி பாதிப்புகள் இதன் விளைவாக ஏற்பட்டிருந்திருக்கும். யூத உறுப்பினர்களுடன் புறஜாதியாரையும் இணைக்கும் அறை கூவலை சபையானது விரைவில் சந்திக்க வேண்டி இருந்தது. கிரேக்கரானவர்(யூதர்)களும், பலஸ்தீனிய யூதர்களும்

இணைந்து வாழக் கற்றுக் கொள்ளவில்லையென்றால், யூதர்களும் புறஜாதிகளும் இணைந்திருப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்க முடியாது!

பல சபைகள் பிரச்சனைகளால் பிளவுபடுவதையும், அப்பிரச்சனையில் ஈடுபட்டுள்ளவர்களின் மனங்களில் பிளவுக்கான பிரச்சனைகள் முக்கியமாய்க் குறிப்பிடக் கூடியவைகளாயிருப்பதையும் நான் எனது வாழ்க்கையில் கண்டிருக்கிறேன். அநேக நிகழ்ச்சிகளில், அடிப்படைப் பிரச்சனையானது அவ்வளவொன்றும் பெரிதாய் இராமல், கையாளக்கூடிய அளவு சிறியதாகவே இருந்துள்ளது. அது கையாளப்படாததினால், வளர்ந்து-துன்பகரமான பிளவு ஏற்பட்டது!

## விரிசல்களின் மூலம் மக்கள் விழுந்தபோது அப்போஸ்தலர்கள் என்ன செய்தனர் (6:2, 3)

பிரச்சனைகள் பெரிதாகிவிடாதபடிக்கு, அவைகள் சிறிய பிரச்சனைகளாயிருக்கையிலேயே அவைகளை எவ்விதம் கையாள முடியும்? விரிசல்கள் மூலம் மக்கள் விழுகின்றபோது நாம் என்ன செய்ய வேண்டும்? நாம் 6:2, 3லிருந்து சில ஆலோசனைகளைப் பெறுவோம்.

### நல்ல முன்னோடிகள் பிரச்சனைகளை உடனடியாக உணர்வுப் பூர்வமான முறையில் - கையாளுகின்றனர்

நல்ல முன்னோடிகள் பிரச்சனைகளை உடனடியாகக் கையாளுகின்றனர். “அப்பொழுது பன்னிருவரும்[16] சீஷர் கூட்டத்தை வரவழைத்து: நாங்கள் தேவ வசனத்தைப் போதியாமல், பந்திவிசாரணை செய்வது தகுதியல்ல” (வ. 2) என்றார்கள். அப்போஸ்தலர்கள் இப்பிரச்சனையைப்பற்றி எவ்விதம் அறிந்தனர் என்று எனக்குத் தெரியவில்லை. யாரேனும் ஒருவர் கடைசியாக அப்போஸ்தலரிடம் வந்து முறையிட்டிருக்கலாம் - ஆனாலும் இதில் நான் ஐயப்படுகிறேன். அப்போஸ்தலர்கள் அந்தப் பிரச்சனையை கேள்விப்பட்ட விதம் எதுவாயிருப்பினும், அவர்கள் அதைக் கேள்விப்பட்டபோது, அது தானாகவே தீர்ந்து போகுமா என்று பார்ப்பதற்காக அவர்கள்

அதைக் கண்டுகொள்ளாமல் இருந்து விடவில்லை. அதைக் குறித்து அவர்கள் உடனடியாக செயல்படத் தொடங்கி னார்கள். அவ்வாறு செய்கையில் அவர்கள் கூர்ந்தறியும் திறனைக் காண்பித்தனர்.

நான் அப்போஸ்தலர்களில் ஒருவராக இருந்திருந்தால் எனது உணர்வுகளில் நான் ஒரு பெரிய இடர்ப்பாட்டைப் பெற்றிருந் திருக்கக்கூடும். முதலாவதாக, இவ்விமர்சனத்தை நான், என்னைப்பற்றியதாகக் கருதியிருப்பேன். வசனப் பகுதியில் இம்முறையீடு "சொந்த நாட்டிலேயே இருந்த யூதர்களுக்கு" எதிரானது என்று கூறப்படுகிறது; உண்மையில் இது அப்போஸ் தலர்களுக்கு எதிரானதாகும், ஏனெனில் அவர்களே பந்தி விசாரணைக்குப் பொறுப்பாளிகளாயிருந்தனர். நான் பின் வருமாறு வீறு கொண்டு எழ விரும்பியிருப்பேன்: "எவ்வளவு நன்றியில்லாமல் பேசுகிறீர்கள்! உங்கள் விதவைகளைப் போஷிக்க வேண்டும் என்று பிரமாணத்தில் எங்கு கூறப் பட்டுள்ளது? இதை நாங்கள் செய்ய வேண்டியதில்லை - எங்கள் இருதயத்தின் நற்பண்புகளாலேயே இதை நாங்கள் செய்கின் றோம் - ஆனால் உங்கள் உரிமை மீறப்பட்டது போல நீங்கள் செயல்படுகின்றீர்கள்! எங்களால் முடிந்த அளவு இதைச் சிறப்பாகச் செய்கின்றோம் என்று உங்களுக்குத் தெரியாதா? இதைக் கொஞ்சமாவது பாராட்டுவதற்கென்ன?"

இரண்டாவதாக, முறுமுறுப்பவர்களையோ, முறையிடு பவர்களையோ மற்றும் குற்றம் காண்பவர்களையோ நான் விரும்புவதில்லை - அவர்கள் எவ்வளவாய் மகிழ்ச்சியற்றிருக் கிறார்கள் என்பது ஒரு பொருட்டல்ல! எனது உடனடி பதில் செய்கையானது, "முறையிடுவதை நிறுத்தி அமைதியாயிருங் கள்! இதைக் காட்டிலும் நன்றாக உங்களால் செய்ய முடியு மென்றால் செய்து கொள்ளுங்கள்!" என்று அவர்களிடம் சத்த மிடுவதாகவே இருந்திருக்கும். குறைந்த பட்சம், எனது பதிலா னது "உணர்வுப்பூர்வமானது" என்று வகைப்படுத்தக் கூடாத நிலையிலேயே இருந்திருக்கும்.

மாறுபட்ட கருத்தை கேள்விப்பட்ட போது, முறுமுறுத் ததற்காக அவர்களைத் தாக்கிப் பேசவோ அல்லது முறையீடு செய்தவர்கள் தங்களிடம் வராததற்காக அவர்களைத் திட்டவோ அப்போஸ்தலர்கள் சபையாரை ஒன்று கூட்ட வில்லை. மாறாக, சட்ட பூர்வமான பிரச்சனை நிலவுவதை

அவர்கள் ஒப்புக்கொண்டு அதற்கு ஒரு தீர்வை ஆலோசனை யாக முன் வைத்தனர். பிரச்சனையைக் குறித்தும், பிரச்ச னையை சார்ந்தவர்களைக் குறித்தும் அவர்கள் உணர்வுப் பூர்வமாகச் செயல்பட்டனர்.

**நல்ல முன்னோடிகள் சபையாரை ஈடுபடுத்துகின்றனர்**

விரிசல்கள் மூலம் மக்கள் அல்லது பொருட்கள் விழுகின்ற போது, நல்ல முன்னோடிகள் அதற்குத் தீர்வுகாண சபையாரை ஈடுபடுத்துகின்றனர். "அப்பொழுது பன்னிருவரும் சீஷர் கூட்டத்தை[17] வரவழைத்து" (வ. 2அ) என்று நாம் படிக்கின் றோம். இதை அவர்கள் எவ்விதம் செய்தனர்? அவர்கள் இருபது அல்லது முப்பதாயிரம் பேரையும் ஒரே சமயத்தில் ஒன்றாகக் கூடும்படி அழைத்தார்களா? சபையின் ஒவ்வொரு குழுவி லிருந்தும் (ஒருவேளை குடும்பத்தலைவர்கள்) பிரதிநிதிகளை அவர்கள் அழைத்தார்களா? மேலும் அவ்வளவு பெரிய கூட்டத்துடன் செய்தித் தொடர்பு கொள்ள அவர்களால் எப்படி முடிந்தது? இதைப்பற்றிய விபரங்கள் எதுவும் எனக்குத் தெரியாது, ஆனால் அவர்கள் சபையார் யாவரையும் இதில் ஈடுபடுத்தினார்கள் என்பதை நான் அறிகிறேன்.

சபையார் மேல் அவர்கள் நம்பிக்கையைக் காண்பித்தனர். முறுமுறுத்தவர்கள், "நமது முன்னோடிகளின் மேல் எங்களுக்கு நம்பிக்கையில்லை" என்று கூறியிருந்தனர், ஆனால் முன்னோடி கள், "நாங்கள் உங்களை நம்புகிறோம். முக்கியமான இந்தத் தேவைக்கு, நீங்களே மனிதர்களைத் தேர்ந்தெடுக்கும்படி நாங்கள் விரும்புகிறோம்" (வ. 3அ) என்று கூறினர்.

புதிய ஏற்பாட்டின் மற்ற சில வசனப்பகுதிகளும் கூட, முன்னோடிகளின் நியமனம்பற்றிப் பேசுகின்றன (தீத்து 1:5; அப். 14:21-23 ஐக் காணவும்), ஆனால் அது எவ்விதம் செய்யப் பட்டது என்பது இங்கு மட்டுமே சுட்டிக்காட்டப்படுகிறது. ஊழியர்தான் முன்னோடிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சிலர் எண்ணுகின்றனர்; மூப்பர்களே இந்தத் தேர்ந்து கொள்ளுதலைச் செய்ய வேண்டுமென்று மற்றவர்கள் எண்ணு கின்றனர். தேர்ந்து கொள்ளும் தகுதி படைத்த முன்னோடி களின் குழு ஒன்று இருந்திருக்குமேயானால், அது ஆவியான வரால் ஏவப்பட்ட அப்போஸ்தலர்களின் குழுவே ஆகும். அவர்கள், சபையாரிடம், "நீங்களே தேர்ந்து கொள்ளுங்கள்!"

*என்று கூறினர்.*

*சபையானது எந்த ஒரு அறைகூவலையும் சந்திக்கும் போது, நல்ல முன்னோடிகள், அதற்குத் தீர்வு காண்பதற்கு சபையார் யாவரையும் ஈடுபடுத்துகின்றனர். கூடுதலாக சில முன்னோடிகள் தேவைப்படும்போது விசேஷமாக இது உண்மையாக உள்ளது.*

***நல்ல முன்னோடிகள் பொறுப்புகளைப் பகிர்ந்தளிக்கின்றனர்***

*நல்ல முன்னோடிகள், எல்லா விஷயங்களையும் தாங்களே கையாளுவதற்கு விரும்புவதில்லை. இவ்விடத்தில் அப்போஸ் தலர்கள்,*

> *நாங்கள் தேவ வசனத்தைப் போதியாமல், பந்தி விசாரணை செய்வது தகுதியல்ல. ஆதலால் சகோதரரே, பரிசுத்தஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழு பேரை[18] உங்களில் தெரிந்து கொள்ளுங்கள்; அவர்களை இந்த வேலைக் காக ஏற்படுத்துவோம். நாங்களோ ஜெபம்பண்ணுவதிலும் தேவ வசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம் என்றார்கள் (வ. 2-4).*

*ரோமர் 12 மற்றும் 1 கொரி. 12 ஆகிய அதிகாரங்கள், எல்லா கிறிஸ்தவர்களும் ஒரே விதமான திறமைகளைப் பெற்றிருப் பதில்லை என்பதைத் தெளிவாக்குகின்றன. ஒருவர் கண்ணைப் போலவும், வேறொருவர் காதைப் போலவும், இன்னொருவர் வாயைப் போலவும், இன்னும் சிலர் கைகள் மற்றும் கால்களைப் போலவும் செயல்படுகின்றனர். சபையின் ஒரு பணிக்கு ஒருவர் தகுதியுள்ளவராயிருக்கையில், இன்னொருவர் வேறொரு பணிக்குத் தகுதியுள்ளவராயிருக்கிறார். நாம் அனைவரும் வித்தியாசப்பட்ட ஊழியங்களைப் பெற்றிருக்கிறோம். அப்போஸ்தலர்கள் இவ்விடத்தில் "தேவ வசனத்தைப் போதிக் கிற ஊழியம்" என்று பேசும்போது, வசனம் 1ல் "விசாரணை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள அதே கிரேக்க வார்த்தை யைப் பயன்படுத்தினர்.[19] மற்றவர்கள் உணவளிக்கும் ஊழியத் தைச் செய்ய முடியும்; அப்போஸ்தலர்கள் வசன ஊழியத்திற்குப் பொறுப்பாயிருந்தனர்!*

*அப்போஸ்தலர்களுக்கு அவர்களின் பணி விபரத்தைத் தேவன் கொடுத்திருந்தார் - அவர்கள் உயிர்த்தெழுதலுக்கு சாட்சிகளாயிருக்க வேண்டும் - அப்பணியை நிறைவேற்ற*

*அவர்கள் பரிசுத்த ஆவியானவரால் பலம் பெற்றிருந்தனர். அவர்களின் பலத்தை உணவளிக்கும் ஊழியத்திற்குத் திருப்பி விட சாத்தானால் முடிந்திருந்தால், அவன் மாபெரும் வெற்றி யடைந்திருக்க முடியும். குறைந்த அளவு ஆத்துமாக்களே இரட்சிக்கப்பட்டிருப்பார்கள்; சபையின் ஆவிக்குரிய வளர்ச்சி தடைப்பட்டிருக்கக் கூடும். இருப்பினும், அப்போஸ்தலர்கள், தங்களுக்கென்று தேவன் வைத்திருந்த திட்டத்தைப் புரிந்து கொண்டு, அவரது நோக்கத்திற்குத் தங்களையே ஒப்புக் கொடுத்தனர். அவர்கள், "இப்பணியை நிறைவேற்றத் தகுதி யுள்ள மற்ற சகோதரர்களைத் தேர்ந்தெடுங்கள், இதன் மூலம், நாங்கள் என்ன செய்ய வேண்டுமென்று தேவன் விரும்புகின் றாரோ, அதை எங்களால் செய்ய முடியும்!" என்று கூறினர்.*

*பிராந்திய சபைகளில் தேவனால் அங்கிகரிக்கப்பட்ட நமது முன்னோடிகள், மூப்பர்கள், கண்காணிகள் அல்லது மேய்ப்பர் கள் என்று அழைக்கப்படுகின்றனர். தேவன் இம்மனிதர் களுக்கும் பணி விளக்கத்தைக் கொடுத்துள்ளார்: இவர்கள் மந்தையின் மேய்ப்பர்களாயிருக்க வேண்டும்! ஆயினும், இவர்கள் மேய்ப்புப் பணியிலிருந்து, உணவளிக்கும் பணிக்கு விலகிச் செல்வது சுலபமே, அவ்வாறு நடக்கையில், சபையானது "மேய்ப்பன் இல்லாத மந்தை" போல் ஆவதால் சாத்தான் வெற்றியடைகிறான் (மத். 9:36). மூப்பர்கள், சபையின் பணித் திட்டம் முழுவதையும் கண்காணிக்க வேண்டும்,[20] ஆனால் அவர்களே எல்லா வேலைகளையும் செய்ய வேண்டும் என்று இது பொருள்படாது. ஒரு பணியானது வேறோருவரால் செய்ய முடியுமென்றால், மூப்பர்கள் அப்பணியை வேறொருவர் செய்யும்படி விட்டுவிட வேண்டும்-ஆனால் மேய்ப்புப் பணி மூப்பர்களாலேயே செய்யப்பட வேண்டும். இந்த பொறுப்பா னது வேறு எவருக்கும் தரப்பட முடியாதது ஆகும். இது மூப்பர்கள் மட்டுமே செய்யும் ஊழியத்தின் சாரம் ஆகும்!*

## *முடிவுரை*

*ஆவிக்குரிய ஆய்வில் சற்று நேரத்தைச் செலவிடுங்கள். நீங்கள் ஆராதிக்கும் சபையானது எவ்வளவு பலமுள்ளதாய் இருக்கிறது? நீங்கள் அதில் கொண்டுள்ள ஈடுபாடு எவ்வளவு? விரிசல்களை அடைப்பதற்கு உங்கள் திறமைகளை நீங்கள்*

பயன்படுத்துகிறீர்களா? - அல்லது நீங்களே சில விரிசல்களை அகலமாக்கியிருக்கிறீர்களா? பிரச்சனைகளைத் தீர்ப்பதில் ஈடுபடுவதற்குப் பதில் நீங்களே முறுமுறுப்பவர்களாகவும், முறையிடுபவர்களாகவும் இருக்கக்கூடிய சாத்தியக் கூறு உள்ளதா?

இந்த இருதய சோதனையில் நீங்கள் ஈடுபடுகையில், உங்கள் பிராந்திய சபையில் நீங்கள் ஒரு செயல்படும் உறுப்பினராக இல்லை என்பதை ஒப்புக்கொள்ள நேரிடலாம். அப்படியில்லை யென்றால், - எண்ணிக்கையில் கூடுதலாக ஒரு நபராக இருப்ப தற்குப் பதில், ஒரு நபராக எண்ணப்படுகின்ற - ஒரு முக்கிய உறுப்பினராக நீங்கள் விளங்க வேண்டியது அவசியமாகும் என்று ரிச்சர்ட் ரோஜர்ஸ் தம் பிரசங்கத்தில் கூறினார்.

நீங்கள் ஒருபோதும் "விசுவாசத்திற்குக் கீழ்ப்படிந்திருக்க வில்லை" என்றுகூட நீங்கள் ஒப்புக்கொள்ள நேரிடலாம். இவ்விதமாக, நீங்கள் கர்த்தரால் அவருடைய சபையில் சேர்த்துக் கொள்ளப்படாமல் இருக்கலாம், எனவே அவரது ஊழியத்தில் பயன்படுத்தப்பட முடியாமல் இருக்கலாம். இயேசுவில் உள்ள உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு அவருக்குள் ஞானஸ்நானம் பெறுவதற்கு, இன்னொரு நாளுக்காக நீங்கள் காத்திருக்க வேண்டாம்!

## பிரசங்கக் குறிப்புகள்

இந்தப் பாடத்திலும், அடுத்த பாடத்திலும் நாம் படிக்கின் றவை குறுகியதாயிருப்பினும், நல்ல தலைமைத்துவத்தைப் பற்றிய ஆழமான கண்ணோட்டத்தை இவைகள் தருவதால் சிறப்பாகக் கவனிக்க வேண்டியவைகளாயுள்ளன. முன்னோடி களைத் தேர்ந்தெடுப்பதற்குத் தயாரிப்பில் ஒரு பாகமாக இவ்விரண்டு பாடங்களையும் நான் சில வேளைகளில் பயன்படுத்துகின்றேன். அப். 6ல் உள்ள பிரச்சனையைக் கையாண்ட விதத்தில் அப்போஸ்தலர்கள் நல்ல தலைமைத் துவத்தின் கொள்கைகளை விளக்கியுள்ளனர். ஏழு பேரைத் தேர்ந்தெடுப்பதில் அவர்கள் சபையாரை ஈடுபடுத்தி, அவர் களுக்கான தகுதிகளை விளக்கிக் கூறி, தேர்ந்தெடுக்கப்பட்ட

*வர்களுக்கு ஜெபம் செய்து, அவர்களின் தலைகளின் மேல் கைகளை வைத்தனர்.*

குறிப்புகள்

*[1]"விரிசல்களின் மூலம் விழுதல்" என்பது "புறக்கணிக்கப்படுதல்" என்று பொருள் படுகின்ற உருவக நடை மொழியாகும். இச்சொற்றொடர் வழக்கமற்ற தாயிருந்தால், வேறொன்றை இதற்குப் பதில் பயன்படுத்தவும். சொற்ப விளக்கத்துடன் பலர் இச்சொற்றொடரைப் புரிந்து கொள்ள முடியும். [2]ஏற்புடையதாயிருப்பின், சபையில் சமீபத்தில் "விரிசல்களின் மூலம் விழுந்த" சிலரது எடுத்துக்காட்டுகளைத் தரலாம். (கண்காணிப்பானது வருத்தத்தை உண்டாக்கி யிருந்தால், இதை ஒரு வழக்காக எடுத்துக்கொள்ளாமல், இது சுய விருப்பத்தின் படியானதல்ல என்று விளக்குவதற்கு அச்சூழ்நிலை ஒரு வாய்ப்பளிப்பதாய் உள்ளது.) [3]மொழிபெயர்ப்பாளர்களால் ''உணவுபற்றிய'' என்ற வார்த்தைகள் தரப்பட்டுள்ளன, ''பந்தி விசாரணை'' என்ற சொற்கள் இதையே நமக்குக் கூறுகின்றன (வ. 2). [4]சிலர், உயர்ந்த அளவில் இவ்வெண்ணிக்கை 100,000 ஆக இருக்கக் கூடும் என்று கணிக்கின்றனர். எண்ணிக்கை முக்கியமற்றதாகும். இங்கு சபையார் யாவரும் இப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதில் ஈடுபடுத்தப்பட்டனர் என்ற கருத்தை வலியுறுத்துவதற்காகவே இது குறிப்பிடப்பட்டுள்ளது. [5]விருப்ப மிருந்தால் விளக்கிக் கூறுவதற்கு இது ஒரு வசீகரமான கருத்தாகும். அநேக வீரக்கலைகளில், எதிரியின் பலமே அவனுக்கெதிராகப் பயன்படுத்தப் படுகின்றது. சில விஷயங்களைப் பொறுத்தமட்டில் நாம் ஆவிக்குரிய வகையில் பலத்துடன் இருக்கிறோம் என்று நாம் எண்ணினால், இது அளவுக்கதிகமான தன்னம்பிக்கை யையும், தேவனுக்குப் பதில் தன்னையே சார்ந்துள்ள ஒரு தன்மையையும் தூண்டிவிடக் கூடும். [6]இந்த விதவைகளில் சிலர், பெந்தெகொஸ்தே பண்டிகைக்காக தூர தேசத்திலிருந்து வந்து, மனம் மாறியவர்களாயிருக்கலாம் (அதிகாரம் 2); இவர்களின் கணவர்கள் இடைப்பட்ட வருடங்களில் இறந்திருக்கலாம். ஆயினும் இவர்களில் பெரும்பாலோர் பலஸ்தீனத்தின் மற்ற பகுதிகளிலிருந்து அல்லது உலகத்தின் மற்ற பகுதிகளில் இருந்து (அவர்கள் விதவைகளாவதற்கு முன்போ அல்லது பின்போ) ஓய்வுக்காக எருசலேமிற்கு வந்து சேர்ந்தவர்களாயிருக்க வேண்டும். பரிசுத்த நகரமாகிய எருசலேமில் ஓய்ந்திருப்பதே இஸ்ரவேல் ஜனங்கள் ஒவ்வொருவரின் கனவாக இருந்தது. [7]நிதிகள் யாவும் அப்போஸ்தலர்களின் பாதத்திலே வைக்கப்பட்டன (4:35, 37; 5:2), அப்பணிக்கு மனிதர்கள் யாரும் நியமிக்கப்பட்டிராததால், அவர்களே அதைச் செய்ய வேண்டியிருந்தது என்று சுட்டிக் காண்பித்தார்கள் (6:2-4). [8]ஒருவேளை 5:6, 10ல் கூறப்படும் "வாலிபர்கள்" உதவியிருக்கலாம். [9]இதற்கு, யூதர்கள் கிரேக்க மொழியைப் புரிந்து கொள்ளவில்லை என்று பொருளல்ல; அவர்கள் அரமாயிக் மொழியை அன்றாடம் பயன்படுத்தினர் என்றே பொருளாகும். [10]இது, கிரேக்கரானவர் (யூதர்)கள் "நல்ல யூதர்கள்" அல்ல என்று பொருள்படாது. நீண்ட தூரத்திலிருந்து பண்டிகைக்காக அவர்கள் எருசலேமுக்கு வந்ததும், அநேகர் எருசலேமிலேயே தங்கியதும், நியாயப் பிரமாணத்திற்கு அவர்கள் தங்களையே எவ்வளவாய் ஒப்புக்கொடுத்திருந்தனர் என்பதற்குச் சாட்சியாய் உள்ளது. மார்க்க முறைமைகளையும், மனுஷரால் நிலைநிறுத்தப் பெற்ற பாரம்பரியங்களையும் அவர்கள் உதறித் தள்ளியதால் கீழாகப் பார்க்கப்பட்டனர்.*

[11]எருசலேம் சபையிலிருந்த அநேக கிரேக்கரானவர் (யூதர்) கள் அநேகமாக, பெந்தெகொஸ்தே பண்டிகைக்கு அங்கு வந்திருந்து (அப். 2), மனம் மாற்றப்பட்டுப் பின் எருசலேமிலேயே தங்கியவர்களாயிருக்க வேண்டும். [12]கிரேக்கரானவர் (யூதர்) கள் எருசலேமில் தங்களுக்கென்று தனியாக ஜெப ஆலயத்தைக் கொண்டிருந்தனர் என்று அப். 6:9ல் சுட்டிக்காட்டப்படுகின்றது. இரு வகையான யூதர்களும் ஒருவருக்கொருவர் சற்று எட்ட நின்றே பழகினர். [13]சபையின் முதலாவது பெரிய பிரச்சனையானது உபதேச முறைமைகளில் அல்ல, நடைமுறையில் ஏற்பட்டதாகவே இருந்தது. சில சபைகள் உபதேசப் பிரச்சனைகளினால் பிரிகின்றன; ஆனால் பல சபைகள் நடைமுறைப் பிரச்சனைகளினாலேயே பிரிகின்றன. எந்தப் பிரச்சனையும் புறக்கணிக்க முடியாததாகும். [14]மேற்கத்திய வசனப்பகுதியில் ''அது எபிரெயர்களால் நிர்வகிக்கப்பட்டதால்'' என்பது சேர்க்கப்பட்டுள்ளது. (“மேற்கத்திய வசனப்பகுதி” என்றால் என்ன பொருள்? ஆதி நூற்றாண்டுகளில் [இரண்டாம் நூற்றாண்டு முதல் நான்காம் நூற்றாண்டு முடிய] கிறிஸ்தவத்தின் பெரிய மையங்கள் வசனங்களைப் பிரதியெடுத்து பின்பு அவைகளை மறுபிரதியெடுத்து, இவைகளின் விளைவாகவே வளர்க்கப்பட்டன. எனவே அவர்களிடம் குறிப்பிடத்தக்க வசனப்பகுதிகள் காணப்பட்டன. அலெக்ஸாந்திரியா, செசரியா, அந்தியோகியா, மேற்கு அல்லது ரோம் ஆகியவை குறிப்பிடத்தக்கவைகளாகும். ரோமாபுரி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் பயன்படுத்தப்பட்ட மேற்கத்திய வசனப்பகுதியின் சிறப்பான பண்பு யாதெனில், விரிவு படுத்தவும், கூடுதல் விபரங்களைச் சேர்க்கவும் இது ஏற்புடையதாக இருந்தது. இவைகள் ஏவப்பட்ட வசனத்தின் பகுதியாகக் கருதப்படுவதில்லை, ஆனால் படிப்பதற்குச் சுவையானவைகளாகும்.) [15]யாத். 15:24; 16:2, 8; 17:3; எண். 14:2, 27, 29, 36; 16:41; உபா. 1:27. [16]“பன்னிருவர்” என்பது அப்போஸ்தலர்களைக் குறிக்கப் பயன்படும் ஒரு நுட்பமான வழியாகும். சவுல்/பவுல் இன்னமும் மனமாற்றப்பட்டிருக்கவில்லை; இது, யூதாஸுக்குப் பதில் மத்தியா தேர்ந்தெடுக்கப் பட்டது தேவனால் அங்கீகரிக்கப் பட்டிருந்ததை அடையாளப்படுத்துகிறது (அப். 1 இதழில் 1:23, 26 ஆகியவற்றிற்கான விளக்கவுரைகளைக் காணவும்). [17]“சபையார்” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது “கூட்டத்தார்” என்ற பொருள் தருவதாகவே உள்ளது. அப். 1 இதழில் 4:32க்கான “சபைகள்” என்பதன் விளக்கவுரையைக் காணவும். 6:2ல் ''சபையார்'' என்பதற்கான கிரேக்க வார்த்தையானது 6:1ல் “பெருகினபோது” என்ற வினைச் சொல்லுக்குள்ள மூல வார்த்தையாகவே உள்ளது [அல்லது KJVயில் “பெருகின போது”]. அப்போஸ்தலர் கள் “பெருகியிருந்த குழுவை” ஒன்றாகக் கூடும்படி அழைத்தனர். [18]அப்போஸ்தலர் கள் ஏன் ஏழு பேர் என்று குறிப்பிட்டனர்? இதற்கு அநேக யூகங்கள் செய்யப் பட்டுள்ளன (“7” என்பது முழுமையான எண், யூதர்கள் ஏழு பேர் கொண்ட ஆலோசனைக் குழுவை வைத்திருந்தனர், முதலியன), ஆனால் நாம் இதை அறியவில்லை. ஒருவேளை நகரம் (அல்லது தேவையில் இருந்தவர்களின் வீடுகள்) இயல்பாகவே ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கலாம், அவை ஒவ்வொன்றுக் கும் ஒரு மனிதர் பொறுப்பாளராகத் தேவைப்பட்டிருக்கலாம். அப்பணியைச் செய்ய ஏழு பேர் தேவைப்பட்டனர் என்பதே மிகச் சிறந்த பதில் ஆகும். வேலை இல்லையென்றால், மனிதர்கள் நியமிக்கப்படவே கூடாது. ஒரு வேலையைச் செய்ய எவ்வளவு பேர் தேவையோ அவ்வளவு பேர்களே நியமிக்கப்பட வேண்டும் - அதிகமாக நியமிக்கக் கூடாது. [19]KJVயில் “அன்றாடக விசாரணை” என்று வசனம் 1லும், “போதிக்கிற ஊழியம்” என்று வசனம் 4லிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. [20]கடந்த நாட்களில், சிலர் அப். 6:1-7 பகுதிகள், மூப்பர்கள் ஆவிக்குரிய தேவைகளையும், உதவிக்காரர்கள் சரீரத்திற்குரிய தேவைகளையும் மேற்பார்வை செய்ய வேண்டும் என்று போதிப்பதற்குப் பயன்படுத்தினர். ஆயினும், மூப்பர்கள்

மட்டுமே “மேய்ப்பர்கள்” அல்லது “கண்காணிகள்” என்று கூறப்பட்டனர் (அப். 20:28ற்கான குறிப்புகளைக் காணவும்); ‘‘உதவிக்காரர்’’ என்ற வார்த்தை “வேலைக்காரர்” என்ற பொருளை மட்டுமே கொண்டுள்ளது. மூப்பர்களுக்கு, தகுதி படைத்த உதவிக்காரர்கள் (deacons) தேவை. இவ்வுதவிக்காரர்கள் சரீரப் பிரகாரமான அநேக தேவைகளைக் கவனித்துக் கொள்ளுகையில், மூப்பர்கள் ஆவிக்குரிய மேய்ப்புப் பணியைச் செய்ய இயலும், ஆனால் முழுமையான கண்காணிப்பை மூப்பர்களே மேற்கொள்ள வேண்டும் (எபி. 13:17).